**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்.</u>**

முன்னிலை – திரு.P. காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்.

**2026 ஏப்ரல்–16–ம் நாள் வியாழக்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் சித்திரை–03–ம் நாள்

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.257/2022</u>**

**<u>CNR.No.TNTH07-005542-2022</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.580/2021. |
| | // எதிர் // | |
| எதிரி | – | பாஸ்கரன் (வயது 45/2021),<br>த/பெ.ராஜையன்,<br>11/B, W-25, ஆலமரத்து தெரு, கம்பம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச–ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. |

இவ்வழக்கானது 23.11.2022–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணையின் போது, குற்றம் முறையிடுபவர் தரப்பில், அரசு குற்றத்துறை உதவி

வழக்கறிஞர் நிலை 2, உத்தமபாளையம் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அஜ்மல்கான்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**<u>தீர்ப்புரை</u>**

**<u>இறுதியறிக்கையின் சுருக்கம்</u>**

1) இவ்வழக்கின் 1ம் சாட்சியின் தகப்பனாரான இறந்துபோன முருகன் என்பவர் கடந்த 10.07.2021ம் தேதி 20.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு, தனது வீட்டுக்கு செல்வதற்காக கம்பம் புது பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் வெளியேறும் இடத்திற்கு சற்று மேற்கே மேற்கு நோக்கு நடந்து செல்லும்போது, இவ்வழக்கின் எதிரி கம்பத்திலிருந்து தேவாரம் செல்லும் TN 57 N 1379 என்ற பேருந்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், முரட்டுத்தனமாகவும் ஓட்டி வந்து நடந்து சென்ற முருகன் மீது பேருந்தின் வலது பக்க முகப்பு இடித்ததில் முருகன் நிலைதடுமாறி கீழே விழுந்துள்ளார். பேருந்தின் வலது பக்க பின் சக்கரம் ஏறியதில் முருகனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு, பலதரப்பட்ட காயத்தால் இறப்பை ஏற்படுத்திய எதிரியின் செயல் ச/பி 279, 304(A) இதச–ன் கீழ் கம்பம் வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி இறுதியறிக்கையை பரிசீலனை செய்து, இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் குவிமுச 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, மேலும் ச/பி 279, 304(A) இதச–கீழ் குற்றச்சாட்டுகள் குவிமுச பிரிவு 240(1)–ன் படி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3) எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் இல்லை.

**4) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்று ஆவணங்களின் படி வழக்கு சுருக்கம்–**

4.1) எதிரி மீதான குற்றச்சாட்டுகளை பொறுத்து, அ.சா.1 மாசாணம் தனது சாட்சியத்தில், கடந்த 10.07.2021–ம் தேதி இரவு 08.10 மணியளவில் தான் வேலை செய்து கொண்டிருந்த போது, யாரோ ஒருவர் தனது அப்பாவிற்கு கம்பம் புதிய பேருந்துநிலையம் அருகே விபத்து ஏற்பட்டு இருப்பதாக சொல்லி தனக்கு தகவல் சொன்னார். தகவல் தெரிந்தவுடன் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது, தனது அப்பா கீழே விழுந்து கிடந்தார், அவருக்கு முகம் முழுவதும் காயம் இருந்தது. காதில் இருந்து இரத்தம் வழிந்தது, தாடை பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டுயிருந்தது. நெஞ்சு பகுதியில் சிராய்ப்பு காயம் இருந்தது. அந்த இடத்தில் தேவாரம் செல்லும் அரசு பேருந்து இருந்தது. அந்த பேருந்தின் பதிவெண் TN 57 N 1379 ஆகும். ஆட்கள் கூட்டமாக இருந்தார்கள். அருகே இருந்த நபர்கள் மூலமாக தனது அப்பா நடந்து சென்று கொண்டிருந்த போது, மேற்படி பேருந்து மோதி விபத்து ஏற்பட்ட விபரத்தை தெரிந்துகொண்டேன். தகவல் தெரிந்து தனது மாமா, அம்மா ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கம்பம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கே மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள். மேற்படி பேருந்ததை ஓட்டுநர் பற்றி விசாரித்த போது அவரது பெயர் பாஸ்கரன் என கூறினார்கள். அவரை தான் அன்றைய தினம் பார்த்தேன். அவர் ஆஜர் எதிரி தான். காவல்நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான். புகாரை தனது மாமா எழுதினார் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.2) அ.சா.2 வினோத்குமார் தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது மைத்துனர். கடந்த 10.07.2021–ம் தேதி இரவு 08.10 மணியளவில் தான் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்த போது அ.சா.1 தனக்கு போன் செய்து, அவரது அப்பாவிற்கு கம்பம் புதிய பேருந்துநிலையம் அருகே விபத்து ஏற்பட்டு இருப்பதாக சொல்லி தனக்கு தகவல் சொன்னார். தகவல் தெரிந்தவுடன் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது, தனது மாமா கீழே விழுந்து கிடந்தார், அவருக்கு முகம் முழுவதும் காயம் இருந்தது. காதில் இருந்து இரத்தம் வழிந்தது, தாடை பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டுயிருந்தது. நெஞ்சு

பகுதியில் சிராய்ப்பு காயம் இருந்தது. அருகே இருந்த நபர்கள் மூலமாக தனது அப்பா நடந்து சென்று கொண்டிருந்த போது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்ட விபரத்தை தெரிந்துகொண்டேன். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கம்பம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கே மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.3) அ.சா.3 சுரேஷ் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான். கடந்த 10.07.2021–ம் தேதி இரவு 11.00 மணியளவில் கம்பம் புதிய பேருந்து நிலையம் அருகே தான் ஒர்க்சாப் வைத்துள்ளேன். தானும், தனபாலன் என்பவரும் பேருந்து நிலையத்திருந்து பேருந்து வெளியே வரும் வழியின் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தபோது, தனது தம்பியின் மாமானார் இறந்து போன விபத்து வழக்கு சம்மந்தமாக போலிசார் அங்கே வந்து விசாரித்து வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக தானும், தனபாலன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.4) அ.சா.4 சுந்தரராமன் தனது சாட்சியத்தில், தான் தற்போது உத்தமபாளையம் வட்டார கோட்டா வாகன ஆய்வளர் நிலை–II ஆக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனங்கள் ஆய்வு செய்து, வாகன ஆய்வு அறிக்கை அளித்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மனோகரன் அவர்கள் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் தனக்கு நன்கு பரீட்சியம் என்பதாலும் ஆவணங்களை பார்த்து தன்னால் சாட்சியம் அளிக்க இயலும். கடந்த 13.07.2021ம் தேதி 13.55 மணிக்கு திரு.மனோகரன் அவர்கள் பணியில் இருந்த போது, கம்பம் வடக்கு காவல்நிலைய குற்ற எண் 580/2021 இதச பிரிவு 279, 304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 57 N 1379 அரசு பேருந்தை ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 13.07.2021ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனங்களை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்தி கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினார் என்றும் சாட்சியளித்துள்ளார்.

4.5) அ.சா.5 சிலைமணி தனது சாட்சியத்தில், தான் கடந்த 10.07.2021–ம் தேதி கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது, கம்பம் வடக்கு காவல்நிலைய பொறுப்பு சார்பு ஆய்வாளர் மணியன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது முருகன் மகன் மாசாணம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, நிலைய குற்ற எண். 580/2021 இதச பிரிவுகள் 279, 304(A) ஆக வழக்கு பதிவு செய்து, முதற்கட்ட விசாரணையில் அன்றைய தினமே 23.00 மணிக்கு சம்பவம் இடம் பார்வையிட்டு சுரேஷ், தனபாலன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் மாசாணம், வினோத்குமார், ஜெயலட்சுமி, மகாலட்சுமி, சுரேஷ், தனபாலன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 11.07.2021–ம் தேதி காலை 08.00 முதல் 10.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டார். பின்னர் காவலர் பாலமுருகன் என்பவர் மூலம் பிரேத உடற்கூறாய்வுக்கு வேண்டுகோள் அறிக்கை கொடுத்து அனுப்பினார். மேலும் அன்றைய தினம் 18.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தார்.

4.6) விபத்தில் ஈடுபட்ட வாகனம் TN 57 N 1379 அரசு பேருந்தினை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தார். பின்னர் வழக்கு கோப்பினை தனது பார்வைக்கு சமர்ப்பித்தார். தான் மேல் விசாரணைக்கு 13.07.2021–ம் தேதி எடுத்துக்கொண்டு சார்பு ஆய்வாளர் முதற்கட்ட விசாரணை செய்த சாட்சிகளை மீண்டும் விசாரணை செய்த போது சார்பு ஆய்வாளரிடம் கூறிய விபரங்களை தன்னிடம் சொன்னதால் மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் 05.08.2021–ம் தேதி மோட்டார் வாகனத்தை தணிக்கை செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் மனோகரன் என்பவரையும், மருத்துவர் லோகேஷ்வரர் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவர்களிடம் இருந்து சான்றிதழ்கள் பெற்றேன். பின்னர் முதல்நிலை காவலர் பாலமுருகன், சார்பு ஆய்வாளர் மணியன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது 05.08.2021ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை

தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட பிறகு, வழக்கில் எதிரிக்கு எதிராக உள்ள அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது, எதிரி அவை பொய் சாட்சிகள் என்றும், தனது தரப்பில் சாட்சி இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**7) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள்:–**

**(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

**(ii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருந்தால் எதிரிக்கு வழங்க கூடிய தண்டனை விபரம் என்ன?**

7.1) கடந்த 10.07.2021ம் தேதி இரவு 08.00 மணியளவில் கம்பம் புது பேருந்து நிலையம் அருகே பேருந்து நிலையத்திற்கு அருகே வெளியில் உள்ள TN 57 N 1379 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து நடந்து வந்த முருகன் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதில் அவருக்கு நெஞ்சுப்பகுதியில் சிராய்ப்பு காயமும், முகம் முழுவதும் சிதைவடைந்தும் தாடை பகுதியில் எலும்பு முறிவும் ஏற்பட்டு, காதுகளில் ரத்தம் வழிந்துகொண்டிருந்த நபரை ஆம்புலன்ஸ் மூலம் கம்பம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்த போது, பரிசோதனை செய்த மருத்துவர் மேற்படி விபத்தினால் பாதிக்கப்பட்ட நபரான முருகன் என்பவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள் என்பதும், எதிரி தான் விபத்து சமயத்தில் மேற்படி அரசு பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்து முருகன் என்பவருக்கு மரணம் ஏற்படுத்தினார் என்பதே அரசுத்தரப்பு வழக்காகும்.

7.2) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.1 விபத்தில் இறந்த நபரின் மகனாவார். அவர் விபத்து சம்பவத்தை பற்றி கேள்வியுற்று புகார் அளித்த நபராவார். ஆகவே, அ.சா.1 விபத்து சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சி மட்டுமே ஆவார். அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வினோத்குமார் என்பவரை கண்ணுற்ற சாட்சியாக அரசுத்தரப்பு முன்னிலைப்படுத்திய போதிலும், அ.சா.2 தான் சம்பவத்தை பற்றி கேள்வியுற்று விபத்து சம்பவ இடத்திற்கு சென்று பார்த்ததாக மட்டுமே சாட்சியளித்துள்ளார். விபத்து சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக அ.சா.2 சாட்சியமளிக்கவில்லை. சம்பவ இடம் பார்வையிட்டு, தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தது பற்றி அ.சா.3 சாட்சியமளித்துள்ளார். விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் அரசுப்பேருந்தினை பரிசோதனை செய்து, அ.சா.ஆ.3 ஆவணமான மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கப்பட்டது குறித்து அ.சா.4 சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 விபத்து சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியமளித்துள்ளார்.

7.3) மேலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 மைத்துனர்கள் ஆவார்கள். அ.சா.ஆ.1 ஆவணமான புகாரை அ.சா.2 எழுதியதாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் மேற்படி புகாரினை தான் எழுதவில்லை என்றும், போலிசார் தான் எழுதினார்கள் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் எதிரியின் கவனக்குறைவாலோ, அஜாக்கிரதையாலோ தான் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், விசாரணை அதிகாரியான அ.சா.5 விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பதனை தெளிவுப்படுத்தி சாட்சியமளிக்கவில்லை. ஆகவே, இவ்வழக்கு விபத்து சம்பவம் எதிரியின் கவனக்குறைவாலோ, அஜாக்கிரதையாலோ ஏற்பட்டது என்று அரசுத்தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 16.04.2026–ம் தேதி இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

<u>**(Statement Under rule 106 of Criminal Rules of Practice)**</u>

| | | |
|---|---|---|
| 1. | அரசு சார்பாக – காவல்நிலையம் குற்ற எண்: | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.580/2021. |
| | **Description of the accused** | |
| 2. | பெயர் | பாஸ்கரன் (வயது 45/2021),<br>த/பெ.ராஜையன்,<br>11/B, W–25, ஆலமரத்து தெரு, கம்பம். |
| 3. | கணவர்/ தகப்பனார் பெயர் | –– |
| 4. | தொழில் | –– |
| 5. | முகவரி | –– |
| 6. | வயது | –– |
| | **தேதிகள்** | |
| 7. | குற்ற நிகழ்வு | 10.07.2021 |
| 8. | புகார் நாள் | 10.07.2021 |

| | | |
|---|---|---|
| 9. | கைது செய்யப்பட்ட நாள் | 11.07.2021 |
| 10. | பிணையில் வந்த நாள் | 11.07.2021 (காவல் நிலைய பிணை) |
| 11. | விசாரணை தொடங்கிய நாள் | 16.02.2023 |
| 13. | விசாரணை முடித்த நாள் | 06.04.2026 |
| 14. | தீர்ப்பு விபரம், நாள் | 16.04.2026 (குற்றவாளி இல்லை) |
| 15. | தீர்ப்பு நகல் | 16.04.2026 |
| 16. | காலதாமத்திற்கான விளக்கம் | --- |

**வழக்கு சுருக்கம்**
**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021- நாளிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021)உத்தரவின் படி CASE SUMMARY கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

| வ. எண் | விபரங்கள் | குறிப்புகள் |
|---|---|---|
| 1. | குற்ற நிகழ்வு நாள்:<br>புகார் நாள்: | 10.07.2021<br>10.07.2021 |
| 2. | குற்ற எண்:<br>காவல் நிலையம்: | அரசு சார்பாக - காவல் ஆய்வாளர், கம்பம் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.580/2021. |
| 3. | குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் அல்லது கூடுதல் குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர்கள் எதிரிகளின் பெயர், வயது, | பாஸ்கரன் (வயது 45/2021),<br>த/பெ.ராஜையன்,<br>11/B, W-25, ஆலமரத்து தெரு, கம்பம். |
| 4. | எதிரி காவல் அடைப்பு நாள் | --- |
| 5. | எதிரி பிணையில் வெளியே வந்த நாள்(Ordinary Bail, Anticipatory Bail) | --- |
| 6. | குற்ற இறுதியறிக்கை நாள் | 05.08.2021 |
| 7. | வழக்கு தாக்கல் செய்த நாள் | 23.11.2022 |
| 8. | குற்றச்சாட்டு வனைந்த நாள் | 16.02.2023 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | இடைக்கால மனுக்கள் விபரம் (Warrant Recall) | --- | | |
| 10. | எதிரி தலைமறைவு விபரம் | --- | | |
| 11. | மேல் நீதிமன்ற தடை உத்தரவு ஏற்பட்டிருந்தால் அதன் விபரம் | --- | | |
| 12. | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை விசாரித்த நாட்கள் | விசாரித்த நாட்கள் | | |
| | | அரசு தரப்பு சாட்சிகளின் எண்ணிக்கை | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1. | 25.06.2025 | 25.06.2025 |
| | | அ.சா.2. | 16.10.2025 | 16.10.2025 |
| | | அ.சா.3. | 16.10.2025 | 16.10.2025 |
| | | அ.சா.4. | 12.02.2026 | 12.02.2026 |
| | | அ.சா.5. | 27.03.2026 | 27.03.2026 |
| 13. | பிரிவு 313(1)(b) கேள்வி கேட்ட நாள் | 02.04.2026 | | |
| 14. | தாமத வழக்குகளின் விபரம்(Delay Reason) | --- | | |

**<u>பிற்சேர்க்கை</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>**

1. அ.சா.1 ... திரு.மாசாணம்
2. அ.சா.2 ... திரு.வினோத்குமார்
3. அ.சா.3 ... திரு.சுரேஷ்
4. அ.சா.4 ... திரு.சுந்தரராமன்
5. அ.சா.5 ... திரு.சிலைமணி (காவல் ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

1. அ.சா.ஆ.1 – 10.07.2021ம் தேதியிட்ட புகார்
2. அ.சா.ஆ.2 – பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை
4. அ.சா.ஆ.4 – 10.07.2021ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை

5. அ.சா.ஆ.5 – பார்வை மகஜர்
6. அ.சா.ஆ.6 – வரைபடம்
7. அ.சா.ஆ.7 – பிரேத விசாரணை அறிக்கை
8. அ.சா.ஆ.8 – உடற்கூறாய்வு சான்றிதழ்

**அரசு தரப்பு சான்று பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**பின்குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது ஜாமினில் இருந்து வந்துள்ளார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கில் சொத்துக்கள் இல்லை.
4. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

// உண்மை நகல்//

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.04.16 20:13:27 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.